# புதுப்பித்தல் ஆண்டில் இறைத்தியான வழிபாடுகள் – 2020

www.tamilcatholicdaily.com

**பாடல் தலைப்புகள்**


**10:30 - 12:00**

1. அழைக்கின்றார் இயேசு
2. காணிக்கை தந்தோம்
3. தேடும் அன்பு தெய்வம்
4. அன்பின் தேவ நற்கருணை
5. நான் நானாகவே வந்திருக்கிறேன்

**12:00 - 13:00**

6. கருணை தெய்வமே கண்பாரும்
7. இயேசுவின் பின்னால்
8. என்னில் எழுந்த இயேசுவிற்கே
9. நான் ஸ்துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேனே

**13:20 - 13:40**

10. ஆராதனை தேவ ஆராதனை
11. அதிசயங்கள் செய்கின்றவர்

**14:00 - 14:20**

12. ஆராதிக்கின்றோம் நாங்கள்
13. நன்றியால் துதிபாடி

**14:40 - 15:00**

14. ஆவியில் பிறந்து
15. வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்

**15:20 - 15:30**

16. ஆராதனை நாயகன் நீரே

**15:40 - 16:00**

17. புகழ்ந்து பாடுவோம்
18. என் ஆற்றலின் ஆண்டவரை

**16:20 - 16:40**

19. ஆற்றலாலும் அல்ல அல்ல
20. உன் புகழைப் பாடுவது என்

**17:00 - 17:20**

21. அருள் தாரும் இயேசுவே

**17:20 - 17:30**

22. மாண்புயர் இவ்வருள்
23. அருட்திரு தேவ தேவன் போற்றி
24. மாசில்லாக் கன்னியே


## 01.அழைக்கிறார் இயேசு ஆண்டவர்

அழைக்கிறார் இயேசு ஆண்டவர்
ஆவலாய் நாம் செல்லுவோம்
அவர் பலியினில் கலந்திட
அவர் ஒளியினில் நடந்திட
சாட்சிகளாய் என்றும் வாழ்ந்திட இந்நாளிலே

தேடியே தேவன் வருகிறார்
தன்னையே நாளும் தருகிறார்
தோள்களில் நம்மைத் தாங்குவார்
துயரினில் அவர் தேற்றுவார்
சுமைகளை சுகங்களாக மாற்றுவார்
வளமுடன் வாழும் வழியைக் காட்டுவார்
வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்
வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்

அன்பினால் உலகை ஆளுவார்
ஆவியால் நம்மை நிரப்புவார்
அமைதியை என்றும் அருளுவார்
ஆனந்தம் நெஞ்சில் பொழிகுவார்
விடியலின் கீதமாக முழங்குவார்
விடுதலை வாழ்வை நமக்கு வழங்குவார்
வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்
வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்

## 02.காணிக்கை தந்தோம் கர்த்தாவே

காணிக்கை தந்தோம் கர்த்தாவே
ஏற்றுக்கொள் எம்மை இப்போதே
கண் கொண்டு பாரும் கடவுளின் மகனே
காணிக்கை யார் தந்தார் நீர் தானே

நாங்கள் தந்த காணிக்கை எல்லாம் ரட்சகன்
கொடுத்தது
மேகம் சிந்தும் நீர்த்துளி எல்லாம் பூமி
கொடுத்தது
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும் (2)
ஆகாயம் மாறும் கடவுளின் மகனே
ஆனாலும் உன் அன்பு மாறாது

காணிக்கை தான் செலுத்த வந்தோம்
கருணை கிடைக்கட்டும்
தேவன் தந்த ஜீவன் எல்லாம் புனிதம்
அடையட்டும்
என் அண்டை வாரும் பாவங்கள் தீரும் (2)
ஏனென்று கேளும் இறைவனின் மகனே
எம்மையே காணிக்கை தந்தோமே

## 03.தேடும் அன்பு தெய்வம்

தேடும் அன்பு தெய்வம்
என்னைத் தேடி வந்த நேரம்
கோடி நன்மை கூடும்-புவி
வாடும் நிலைகள் மாறும்
இந்த வான தேவன் தந்த வாழ்வுப் பாதை
எந்தன் வாழும் காலம் போகும்(2)

வார்த்தையாகி நின்ற இறைவன்
இந்த வாழ்வைத் தேர்ந்த தலைவன்
பாரில் எங்கும் புது பார்வை தந்து -அந்த
பாதையில் அறிந்த அறிஞன்
காலம் கடந்த கலைஞன் என் தலைவன்
இந்த வான தேவன் தந்த வாழ்வுப் பாதை
எந்தன் வாழும் காலம் போகும்(2)

அடிமை அமைப்பு இங்கு ஒழிய-எங்கும்
மனித மாண்பு நிறைய
புரட்சிக் குரல் கொடுத்து புதிய வழிவகுத்து
புதுமை செய்த பெரும் புனிதன்
வாழ்வைக் கடந்த இறைவன் என் தலைவன்
இந்த வான தேவன் தந்த வாழ்வுப் பாதை
எந்தன் வாழும் காலம் போகும்(2)

## 04. அன்பின் தேவ நற்கருணையிலே

அன்பின் தேவ நற்கருணையிலே
அழியாப் புகழோடு வாழ்பவரே
அன்புப் பாதையில் வழி நடந்தே
அடியோர் வாழ்ந்திடத் துணை செய்வீர்

அற்புதமாக எமைப் படைத்தீர்
தற்பரன் நீரே எமை மீட்டீர்
பொற்புடன் அப்ப இரச குணத்தில்

எப்பொழுதும் வாழ் இறைவனானீர்
எத்தனை வழிகளில் உமதன்பை
எண்பித் தெமை நீர் ஆட்கொண்டீர்

கல்வாரி மலையின் சிகரமதில்
கனிவுடன் தினம் எமை நிலைநிறுத்தும்
நற்கருணை விசுவாசமதில்
நம்பிக்கையூட்டி வளர்த்திடுவீர்
இளமையின் பொலிவால் திருச்சபையும்
யாவரும் வாழத் தயைபுரிவீர்

ஞானம் மிகுந்த எம் பாத்திரத்தில்
நல்லொளி பாய்ச்சும் இறைவனே நீர்
ஞாலமெல்லாம் இருள் நீங்கிடவே
நாடுகள் வீடுகள் எங்கணுமே
நலம் பல பொழிவீர் நல் தேவா
நற்கருணை வாழ் நாயகனே

**05. நான் நானாகவே வந்திருக்கிறேன்**

நான் நானாகவே வந்திருக்கிறேன்
உம் பிரசன்னத்தில் வந்து நிற்கிறேன்
நீர் இன்று என்னை ஏற்றுக் கொள்வீரா
உம் ராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொள்வீரா

யோசேப்பை போல் நான் ஒழுங்கில்லையே
நோவாவைப் போல் நீதிமானும் இல்லையே
ஆப்ரகாமைப் போல் விசுவாசியில்லையே
தானியேலைப் போல் உம்மை
வேண்டவில்லையே
நான் நானாக தானாக வந்திருக்கிறேன்
நான் நானாகவே...

மார்த்தாளைப் போல் உம்மை
சேவிக்கலையே
மரியாளைப் போல் உம்மை நேசிக்கலையே
எஸ்தரை போல் எதையும் செய்யவில்லையே
எலிசபெத்தின் நற்குணங்கள் என்னில்
இல்லையே
நான் வீணாகி பாழாகி வந்திருக்கிறேன்
நான் நானாகவே வந்திருக்கிறேன்

**06. கருணை தெய்வமே கண்பாரும்**

கருணை தெய்வமே கண்பாரும்-எங்கள்
பாவங்களை நீர் பொறுத்தருளும்

உடலும் அறிவும் மனமும்- ஒன்று
சேர்ந்து உம்மை எதிர்த்ததையா
தேவ கட்டளை வழியை-மனம்
பன்முறை அறிந்தே வெறுத்தையா
பாவ சேற்றை நாளும்- எம்
வாழ்வே கொண்டு நிறைந்ததையா

பாதை தெளிவுறத் தெரிந்தும்-அதைப்
பார்த்து நாங்கள் நடக்கவில்லை
உண்மை விளக்கு எரிந்தும்-அதன்
ஒளியின் அருகே வாழவில்லை
இறைவன் அன்பு அழைத்தும் -அதை
உணர்ந்த பின்னும் திருந்தவில்லை

அன்பு செய்யும் இறைவா-உனை
மறந்து சென்றதை எண்ணுகின்றோம்
நீதி நிறையும் தலைவா-எம்
பாவம் நினைந்தே கலங்குகின்றோம்
தூய வாழ்வின் நிறைவே- உன்
மன்னிப்புத் தருவாய் உயிர் பெறுவோம்

**07. இயேசுவின் பின்னால்**

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பிப் பார்க்க மாட்டேன் திரும்பிப்
பார்க்க மாட்டேன்-2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால் – 2
இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை
அடைந்தேனே

அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை
ஆதலின் குறையில்லை
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் - 2
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே

தாயும் அவரே தந்தையும் அவரே தரணியில்
நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மை செவ்வழி நடத்தும் ஆயர்
அவரன்றோ
ஆயனே முன்னால் அகிலமே பின்னால் -2
அழைக்கும் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே

**08.என்னில் எழுந்த யேசுவிற்கே**

என்னில் எழுந்த யேசுவிற்கே ஆராதனை
ஆராதனை (2)
நன்மைகள் செய்த இராஜாவிற்கே
நன்றி நன்றி நன்றிப் பலி (2)

எம்மாவு ஊரிலே அப்பத்தை
உடைத்து கண்கள் திறந்தவரே
பார்வை வேண்டும் உம்மைப் பார்க்க
உயிருள்ள உந்தன் பலிதனிலே (2)
ஆராதனை ஆராதனை (2) (என்னில்......)

கானாவூரிலே தண்ணீரை எடுத்து
திராட்சை இரசமாக்கினீர்
குறையுள்ள என் வாழ்வை ஏற்பீரையா
சுவை உள்ள இரசமாய் மாற்றிடுவீர் (2)
ஆராதனை ஆராதனை (2)(என்னில்......)

**09. நான் ஸ்துதிப்பேன்**

நான் ஸ்துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேனே - 4
உம் உள்ளங்கையில் என்னைக் கண்டதாலே
கண்மணி போல காத்துக் கொண்டதாலே
உம் உள்ளங்கையில் என்னைக் கண்டதாலே
கண்மணி போல காத்துக் கொண்டதாலே
நான் ஸ்துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேனே - 4

வானத்து விண்மீனெல்லாம்
உம்மை ஸ்துதித்து ஸ்தோத்தரிக்குதே
வானத்து விண்மீனெல்லாம்
உம்மை ஸ்துதித்து ஸ்தோத்தரிக்குதே
அந்த பரலோகத்தில் உள்ள வெளிச்சத்தாலே
உம்மை கண்சிமிட்டி ஆர்ப்பரிக்குதே
அந்த பரலோகத்தில் உள்ள வெளிச்சத்தாலே

உம்மை கண்சிமிட்டி ஆர்ப்பரிக்குதே
அட ஸ்துதிப்போமே அட ஸ்துதிப்போமே - 2
இயேசு ராஜாவின் அன்பைக் கண்டதால் - 2
நான் ஸ்துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேனே - 4

கடலின் மீன்கள் எல்லாம்
உம்மை ஸ்துதித்து ஸ்தோத்தரிக்குதே
கடலின் மீன்கள் எல்லாம்
உம்மை ஸ்துதித்து ஸ்தோத்தரிக்குதே
பாழ்வெளியினிலே நீரை கண்டதாலே
உம்மை துள்ளி துள்ளி ஆர்ப்பரிக்குதே
பாழ்வெளியினிலே நீரை கண்டதாலே
உம்மை துள்ளி துள்ளி ஆர்ப்பரிக்குதே
அட ஸ்துதிப்போமே அட ஸ்துதிப்போமே - 2
இயேசு ராஜாவின் அன்பைக் கண்டதால் - 2
நான் ஸ்துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேனே - 4

உலகத்தின் உயிர்கள் எல்லாம்
உம்மை ஸ்துதித்து ஸ்தோத்தரிக்குதே
உலகத்தின் உயிர்கள் எல்லாம்
உம்மை ஸ்துதித்து ஸ்தோத்தரிக்குதே
தக்க காலத்தில் நீர் உணவழிப்பதாலே
உம்மை நன்றி சொல்லி ஆர்ப்பரிக்குதே
தக்க காலத்தில் நீர் உணவழிப்பதாலே
உம்மை நன்றி சொல்லி ஆர்ப்பரிக்குதே
அட ஸ்துதிப்போமே அட ஸ்துதிப்போமே - 2
இயேசு ராஜாவின் அன்பைக் கண்டதால் - 2
நான் ஸ்துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேனே - 4
உம் உள்ளங்கையில் என்னைக் கண்டதாலே
கண்மணி போல காத்துக் கொண்டதாலே
உம் உள்ளங்கையில் என்னைக் கண்டதாலே
கண்மணி போல காத்துக் கொண்டதாலே
நான் ஸ்துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேனே – 4

**10. ஆராதனை தேவ ஆராதனை**
ஆராதனை தேவ ஆராதனை
இயேசு இரட்சகா ஆராதனை -02
ஆராதனை ஆராதனை
ஆராதனை தேவ ஆராதனை -03
ஆராதனை தேவ ஆராதனை
இயேசு இரட்சகா ஆராதனை

விண்ணக வேந்தனுக்கு ஆராதனை
மண்ணக இராஜனுக்கு ஆராதனை
விண்ணக வேந்தனுக்கு ஆராதனை
மண்ணக இராஜனுக்கு ஆராதனை
இதயத்தில் இருப்பவர்க்கு ஆராதனை
இரக்கத்தின் தெய்வத்திற்கு ஆராதனை
இதயத்தில் இருப்பவர்க்கு ஆராதனை
இரக்கத்தின் தெய்வத்திற்கு ஆராதனை
ஆராதனை தேவ ஆராதனை
இயேசு இரட்சகா ஆராதனை

அன்பான இயேசுவிற்கு ஆராதனை
அருமையான தெய்வத்திற்கு ஆராதனை
அன்பான இயேசுவிற்கு ஆராதனை
அருமையான தெய்வத்திற்கு ஆராதனை
ஆற்றல் மிகு இயேசுவிற்கு ஆராதனை
ஆறுதலின் தெய்வத்திற்கு ஆராதனை
ஆற்றல் மிகு இயேசுவிற்கு ஆராதனை
ஆறுதலின் தெய்வத்திற்கு ஆராதனை

**11. அதிசயங்கள் செய்கிறவர்**
அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில்
இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள்
வசிக்கிறார் - 2

தண்ணீரை இரத்தமாய் மாற்றினார்
அதிசயம்
எகிப்துத் தண்ணீரை இரத்தமாய் மாற்றினார்
அதிசயம்
வெறும் தண்ணீரை திராட்சை ரசமாய்
மாற்றினார் அதிசயம் – 2
அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில்
இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள்
வசிக்கிறார் - 2

செங்கடைலை இரண்டாக பிரித்திட்டார்
அதிசயம் - 2
புயல் காற்றைத் தம் ஆணையாலே
அடக்கினார் அதிசயம் – 2
அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில்
இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள்
வசிக்கிறார்

குருடர்க்கும் செவிடர்க்கும் சுகம் தந்தார்
அதிசயம் - 2
ஒரு சொல்லாலே மரித்தோரை எழுப்பினார்
அதிசயம் - 2
அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில்
இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள்
வசிக்கிறார்

பாவியான என்னையும் உயர்த்தினார்
அதிசயம்
ஏழை என் மீதும் நேசக்கரம் நீட்டினார்
அதிசயம் - 2
அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில்
இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள்
வசிக்கிறார் - 2

**12. ஆராதிக்கின்றோம் நாங்கள்**
ஆராதிக்கின்றோம் நாங்கள்
ஆராதிக்கின்றோம்
ஆத்ம நேசர் இயேசுவையே
ஆராதிக்கின்றோம்(2)
ஆராதிக்கின்றோம் நாங்கள்
ஆராதிக்கின்றோம்
உண்மையிலும் ஆவியிலும்
ஆராதிக்கின்றோம்(2)

அல்லேலூயா அல்லேலூயா கீதம் பாடியே
அல்லேலூயா கீதம் பாடி ஆராதிப்போமே
இன்று இங்கு விசுவாசத்தால்
ஆராதிக்கின்றோம்
அன்று உம்மை நேரில் கண்டு
ஆராதிப்போமே

வானோரெல்லாம் ஆராதிக்கும் பரிசுத்தரே
ஆனந்தமாய் உந்தன் மக்கள்
ஆராதிக்கின்றோம்(2)
எங்களுடைய பாவங்கள் தீரும்
ஆராதனையாலே
கோட்டைகள் தரும் கொடுமைகள் தீரும்
ஆராதனையாலே (2)

நோய்கள் தீரும் வாதைகள் தீரும்
ஆராதணையாலே
ஆணவம் ஆழியும் தீவினை ஒழியும்
ஆராதனையாலே
இறைபக்தர் அப்போஸ்தலர் ஆராதித்ததால்
திருவருளாலே விலங்குகள் தகர
விடுதலையானாரே

**<u>13. நன்றியால் துதிபாடு நம் இயேசுவை</u>**
நன்றியால் துதிபாடு நம் இயேசுவை
நாவாலே என்றும் பாடு - 2
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர் - 2
எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்

இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும் - 2
- நன்றியால் துதி

செங்கடல் நம்மை சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழல் உண்டு - 2
பாடிடுவோம்பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்து விடும் - 2
- நன்றியால் துதி
கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம் - 2
- நன்றியால் துதி
**<u>14. ஆவியில் பிறந்து</u>**
ஆவியில் பிறந்து
அன்பினில் இணைந்து
இயேசுவைப் புகழ்ந்திடுவோம்
அனைவரும் கூடி ஓர் குலமாக
இயேசுவில் மகிழ்ந்திடுவோம்

இயேசுவைப் புகழ்ந்திடுவோம்- இன்று
இயேசுவில் மகிழ்ந்திடுவோம்
இயேசுவே ஆண்டவர் என்று முழங்கி
சாட்சியாய் வாழ்ந்திடுவோம் -2

விண்ணவரோடும் மண்ணவரோடும்
இயேசுவைப் புகழ்ந்திடுவோம்
படைப்புகளெல்லாம் ஒன்றாய் சேர்ந்து
இயேசுவில் மகிழ்ந்திடுவோம் – 2

துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும்
இயேசுவைப் புகழ்ந்திடுவோம்
சோதனைகளிலும் வேதனைகளிலும்
இயேசுவில் மகிழ்ந்திடுவோம்-2

**<u>15 வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்</u>**
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்
நற்கருணை நாதரை ஆராதிக்கின்றோம்- 2

விடுதலை ஆக்கும் தெய்வமே
ஆராதிக்கின்றோம்
குணப்படுத்தும் தெய்வமே
ஆராதிக்கின்றோம்
காண்கின்ற தெய்வமே ஆராதிக்கின்றோம்
காக்கின்ற தெய்வமே ஆராதிக்கின்றோம்-2
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்.......

இரட்சிக்கின்ற  தெய்வமே
ஆராதிக்கின்றோம்
இரக்கமுள்ள தெய்வமே ஆராதிக்கின்றோம்2
சுகம் கொடுக்கும் தெய்வமே
ஆராதிக்கின்றோம்
தரிசனம் ஆகின்ற தெய்வமே
ஆராதிக்கின்றோம் -2
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்
விண்ணப்பத்தை கேட்பவரே
ஆராதிக்கின்றோம்
கண்ணீரை காண்பவரே ஆராதிக்கின்றோம்
நோய்களை எல்லாம் தீர்ப்பவரே
ஆராதிக்கின்றோம்
சாத்தானை ஜெயித்தவரே
ஆராதிக்கின்றோம்-2
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்.....

பரலோக மன்னாவே ஆராதிக்கின்றோம்
மகிமையான பட்டயமே
ஆராதிக்கின்றோம்-2
திக்கற்றவர்களின் தகப்பனே
ஆராதிக்கின்றோம்
எளியவரின் கேடயமே
ஆராதிக்கின்றோம்-2
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்

பாவமெல்லாம் சுமந்தவரே
ஆராதிக்கின்றோம்
சாந்தமான செம்மறியே ஆராதிக்கின்றோம்
எங்களுக்காக மரித்தவரே
ஆராதிக்கின்றோம்
உயிர்த்த இயேசு ராஜாவே
ஆராதிக்கின்றோம்

**<u>16. ஆராதனை நாயகன் நீரே</u>**
ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே – 2
ஆயுள் முடியும்வரை
உம்மைத் தொழுதிடுவேன் – 2
ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே – 2

ஆயிரம் பேர்களில் சிறந்தோர்
ஆண்டவர் இயேசு நீரே – 2
விடிவெள்ளியே எந்தன் பிரியம் நீரே
என்றென்றும் தொழுதிடுவேன் – 2
ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே

மாந்தர்கள் போற்றிடும் தெய்வம்
மகிமையின் தேவன் நீரே – 2
முழங்கால் யாவுமே முடங்கிடுமே
மகிழ்வுடன் துதித்திடவே – 2
ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே – 2

முடிவில்லா இராஜ்யம் அருள
திரும்பவும் வருவேன் என்றீர் – 2
ஆயத்தமாய் நானும் சேர்ந்திடவே
அனுதினம் வணங்கிடுவேன் – 2
ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே – 2
ஆயுள் முடியும்வரை
உம்மைத் தொழுதிடுவேன் – 2
ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே – 2

**17. புகழ்ந்து பாடுவோம்**

புகழ்ந்து பாடுவோம் மகிழ்ந்து பாடுவோம்.
புதிய விடியல் இன்று காணுவோம்
புதிய பாடல் இன்று பாடுவோம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

இறைவன் அன்புத் தந்தையை புகழ்ந்து
பாடுவோம்
தந்தை அன்பில் வாழ்வதால் மகிழ்ந்து
பாடுவோம் (2)
இயேசுவிற்கு சாட்சியாக என்றும்
வாழுவோம்– 2
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

மீட்பரான இயேசுவைப் புகழ்ந்து பாடுவோம்
மீட்பின் பாதை வந்ததால் மகிழ்ந்து
பாடுவோம்(2)
இயேசுவிற்கு சாட்சியாக என்றும்
வாழுவோம்(2)
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

தூய ஆவி பெற்றதால் புகழ்ந்து பாடுவோம்
தூய்மை பெற்று வாழ்வதால் மகிழ்ந்து
பாடுவோம் (2)
இயேசுவிற்கு சாட்சியாக என்றும்
வாழுவோம்(2)
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

**18. என் ஆற்றலின் ஆண்டவரை**

என் ஆற்றலின் ஆண்டவரை-நான்
எந்நாளும் போற்றிடுவேன்-நல்
அருள் மொழி கேட்க காலமெல்லாம்
அவர் காலடி அமர்ந்திடுவேன்

ஆண்டவர் எனது அரணாவார்
அவரே எனக்கென்றும் துணையாவார்
வலிமையும் வாழ்வும் வழங்கும் நல்தேவன்
என்னுடன் இருக்கின்றார்
என்றும் இருக்கின்றார்

ஆண்டவர் எனது மீட்பராவார்-அவரே
எனக்கென்றும் ஒளியாவார்
வாழ்வாய் வழியாய் விளங்கும் நல் தேவன்
சீர்வழி நடத்திடுவார்
அவர் வழி தொடர்ந்திடுவேன்

**19. ஆற்றலாலும் அல்ல அல்ல**

ஆற்றலாலும் அல்ல அல்ல
சக்தியாலும் அல்ல அல்ல
ஆண்டவரின் ஆவியாலே ஆகுமா ஆகுமே -2

மண்குடம் பொற்குடம் ஆகுமா – ஆகுமே
குறைகுடம் நிறைகுடம் ஆகுமா – ஆகுமே
தண்ணீரும் திராட்சை இரசம் ஆகுமா –
ஆகுமே

செங்கடல் பாதையாய் ஆகுமா – ஆகுமே
செத்தவர் உயிர்த்தெழுதல் ஆகுமா – ஆகுமே
திராட்சை இரசம் திரு இரத்தம் ஆகுமா-
ஆகுமே
பாவிகள் மீட்புப் பெறல் ஆகுமா – ஆகுமே
பாலைவனம் சோலைவனம் ஆகுமா –
ஆகுமே
திருச்சபை ஒருடல் ஆகுமா – ஆகுமே

**20. உன் புகழைப் பாடுவது**

உன் புகழைப் பாடுவது என் வாழ்வின்
இன்பமய்யா
உன்னருளைப் போற்றுவது என் வாழ்வின்
செல்வமய்யா

துன்பத்திலும் இன்பத்திலும் - நல்
தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் - நல்
அன்னையாய் அருகிருப்பாய்
அன்பு எனும் அமுதத்தினை - நான்
அருந்திட எனக்களிப்பாய்
உன்னின்று பிரியாமல் நீ என்றும்
அணைத்திருப்பாய்

பல்லுயிரைப் படைத்திருப்பாய் - நீ
என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் - நீ
என்னையும் ஏன் அழைத்தாய்
அன்பினுக்கு அடைக்கும் தாழ் - ஒன்று
இல்லை என்றுணர்ந்தேன்
உன்னன்பை மறவாமல் நான் என்றும்
வாழ்ந்திருப்பேன்

**21. அருள் தாரும் இயேசுவே**

அருள் தாரும் இயேசுவே சுகம் பெறுவேன்
இயேசுவே(2)
ஒரு வார்த்தை பேசுமே என் வாழ்வு
நலமாகுமே (2)
ஆராதனை -2 ஆராதனை செய்கிறோம் (2)
தாவீதின் திருமகனே தயைகூர்ந்து
இறங்குமையா -2
கடைக்கண்ணால் எமைப் பாருமே
கருணைக்கடல் இயேசுவே(2)
ஆராதனை -2 ஆராதனை செய்கிறோம் (2)

நீர் தொடுவாய் இயேசுவே நோய்களைவேன்
இயேசுவே -2
ஆசீர்வதிப்பாய் இயேசுவே மீட்புப்பெறுவேன்
இயேசுவே -2
ஆராதனை -2 ஆராதனை செய்கிறோம் (2)
மார்போடு அணைத்துக்கொண்டு மன்னித்து
வாழ்வு தரும் -2
பேரன்பே உன்பாதத்தில் என் முத்தம்
ஏற்றுக்கொள்ளும் -2
ஆராதனை -2 ஆராதனை செய்கிறோம் (2)

**22. மாண்புயர் இவ்வருள்**

மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை
தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும்
இனி மறைந்து முடிவு பெறுக
புதிய நியம முறைகள் வருக
புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலாக் குறையை நீக்க
விசுவாசத்தின் உதவி பெறுக
மாண்புயர் இவ்வருள் அனுமானமே

பிதா அவர்க்கும் சுதனவர்க்கும்
புகழ்ச்சியோடு வெற்றி யார்ப்பும்
மீட்பின் பெருமை மகிமையோடு
வலிமை வாழ்த்து யாவுமாக
இருவரிடமாய் வருகின்றவராம்
தூய ஆவியானவர்க்கும்
அளவில்லாத சம புகழ்ச்சி
என்றுமே உண்டாகுக ஆமென். ஆ...மென்

குரு: வானகத்திலிருந்து அவர்களுக்கு அப்பம்
அளித்தீரே
பதில்: இனிமையெல்லாம் தன்னகத்தே
கொண்ட அப்பம் இதுவே

**23. அருட்திரு தேவ தேவன் போற்றி**

அருட்திரு தேவ தேவன் போற்றி
அவர்தம் தூய நாமம் போற்றி (2)

அவர் மகன் இயேசு கிறிஸ்து போற்றி
அவர்தம் தூய நாமம் போற்றி(2)

அவர்தம் தூய இதயம் போற்றி
அவர்தம் விலையில்லா குருதி போற்றி(2)

தேவ நற்கருணையில் இயேசு போற்றி
தேற்றிடும் தூய ஆவி போற்றி(2)

தேவனின் அன்னை கன்னிமரி போற்றி
அவள் திரு மாசில் உற்பவம் போற்றி(2)

அவளது மாண்புறு விண்ணேற்பு போற்றி
அவளது புனித நாமம் போற்றி(2)

அவள் திரு துணைவர் சூசை போற்றி
தூதரில் புனிதரில் தேவன் போற்றி(2)

**24. மாசில்லாக் கன்னியே**

மாசில்லாக் கன்னியே
மாசில்லாக் கன்னியே மாதாவே உன்மேல்
நேசமில்லாதவர் நீசரேயாவார்
வாழ்க வாழ்க வாழ்க மரியே – 2

மூதாதை தாயார் செய் முற்பாவமற்றாய்
ஆதியில்லாதோனை மாதா நீ பெற்றாய்
வாழ்க வாழ்க வாழ்க மரியே – 2

அருள் நிறைந்த மாதாவே
ஆண்டவர் உம்முடனே
பெண்களுக்குள்ளே பேறுபெற்றாயே
போற்றியே புகழ்வோமே
வாழ்க வாழ்க வாழ்க மரியே – 2

**ஆண்டவர் இயேசு உங்களையும் தமது**
**நற்செய்திப்பணிக்கு அழைக்கின்றார்**



**ஆண்டவரின் வருகைக்காக உலகை ஆயத்தப்படுத்தும் பணியில் ஆண்டவரின் அன்பை உலகிற்கு அறிவிக்க நீங்களும் விரும்பினால்...நமது பணியகத்தின் இணையவழி நற்செய்தி குழுவினர் உங்களோடு இணைந்து பணிசெய்ய காத்திருக்கின்றனர்.வானொலி, இணையத்தளம், செபவழிபாடுகள் உட்பட இன்னும் அநேக வழிகளில் நீங்களும் நற்செய்தி அறிவிக்க எம்மைத் தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்பு**
**இயக்குனர்: 004920143373948**
**WhatsAPP: 004917670974769**
**Email:info@tamilcatholicdaily.com**